கண்ணாரக் கண்டனையோ - குருநாதனைக்
காவியுடுத்தவனை காலம் கடந்தவனை

மண்ணிலே பிறவாது மாயையால் தொடராது
விண்ணவரைப்போலே வாழ நீ வேண்டுமென்றால்

பெண்ணை நதி கரையில் வீற்றிடுவான் அந்த
அண்ணல் ஞானானந்தனைப்போற்றிடுவோம்
திண்ணமாய் அவனையே த்யானம் செய்வோர்களின்
எண்ணமெல்லாம் அறிந்து இடர்களை மாற்றிடுவான்

பண்கள் பல அமைத்து பாடினால் போதுமா
பாவமும் பக்தியும் இல்லாது ஆகுமா
கண்கள் இரண்டிருந்தும் காணாது போகுமா
எண்ணம் பல கொண்டினிஏங்கலாகுமா

மாய உலகினிலே மானிடராய்ப் பிறந்து
மன்றாடும் நமக்கு அன்றாடம் தொல்லைதான்
சேயாக நீ சென்றால் தாயாக வந்திடுவான்
மாய ப்ரபஞ்சத்தை மாற்றி அமைத்திடுவான்

ஆயிரம் பேர்கள் அருகினிலே வந்து
ஆன பல கதைகள் அண்ணலிடம் சொல்வார்

அத்தனைக்கும் செவி சாய்த்து அவரவர் உள்ளம் பார்த்து
அனுக்ரஹம் செய்கின்ற அத்புத அழகினை

பிறந்து பிறந்து என்ன பேரின்பத்தைக் கண்டாய்
பிறவாதிருக்க என்ன வழிதான் செய்து கொண்ண்டாய்
மறந்தொரு தரமேனும் குருநாதா என்று சொன்னால்
திறந்து வழி காட்டுவான் திரும்பி வராதிருக்க

ஜாதி மத பேத சண்டை சச்சரவு அவர்க்கில்லை
சன்மார்க்கம் காட்டுகின்றார் உள்மார்க்கம் காட்டும்
திலை நாதனைப்போல் வீற்றிருப்பார் நானதை ஓட்டுவிப்பார்
நம்பித்தொழுகின்ற ஹரிதாசனை கூட்டி வைப்பார்